**10.10.2025**

DVC.No. 02/2024 கரோலின் மார்க்ரெட் க/பெ. ஜான் ஜோசப் ராபர்ட் PW1

குறுக்கு விசாரணை (எதிர்மனுதாரர் தரப்பில்)

வழக்கு பற்றிய விபரங்கள் எனக்கு தெரியும் என்றால் சரிதான். வழக்கை நான் எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனக்கு தேவையான அடிப்படை தேவைகளை எதிர் மனுதாரர் செய்யவில்லை என்பதற்காக இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளேன். இந்த வழக்கை தாக்கல் செய்வதற்கு முன்னால் சமூக நல அலுவலரிடம் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. என்னுடைய திருமண தேதி என்வென்றால் 07.06.1991 ம் ஆகும். எங்களுடைய திருமணம் இந்து முறைபடி நடைபெற்றதா என்றால் இல்லை. கிருஸ்துவ முறைபடி நடைபெற்றது. திருமணத்திற்கான ஆவணம் எதையும் நீதிமன்றத்தில் தாக்கால் செய்துள்ளேனா என்றால் திருமண சான்றிதழை சமர்ப்பித்துள்ளேன். எனக்கும் எதிர் மனுதாருக்கும் திருமணத்திற்கு பிறகு ஆன்சி என்ற பெண் குழந்தை 1994 ம் ஆண்டு பிறந்தது. குழந்தை பிறந்த பிறகு எனக்கும் குழந்தைக்கும் தேவையான அடிப்படை வசதிகளை செய்தாரா என்றால் இல்லை. எனது கணவர் என்னை எப்போது பிரிந்து சென்றார் என்றால் பிரிந்து செல்லவில்லை. நான் நித்தியா என்பவரை வழக்கின் தரப்பினராக சேர்த்துள்ளேனா என்றால் இல்லை. எனது கணவர் வசிக்கும் Apartment க்கு எப்போது சென்றேன் என்றால் 02.10.2023 அன்று சென்றேன். அதன் பிறகு நான் கணவர் வசிக்கு Apartment க்கு சென்றேனா என்றால் இல்லை. 02.10.2023 அன்று என்னுடன் யாரையும் அழைத்து

சென்றேனா என்றால் இல்லை நான் மட்டும் தான் சென்றேன். எனது கணவர் என்ன பணி செய்து வந்தார் என்றால் காவல் துறையில் பணி புரிந்து உதவி ஆய்வாளராக இருந்து ஓய்வு பெற்றுவிட்டார். எனது கணவர் எப்போது ஓய்வு பெற்றார் என்றால் எனக்கு தெரியாது. என்னுடைய சத்தியபிரமான வாக்குமூலத்தில் இரண்டாவது பக்கத்தில் எதிர் மனுதாரர் நித்தியா என்கிற பெண்ணுடன் கள்ள உறவு வைத்துக்கொண்டு அவருடன் குடும்பம் நடத்தி வருவதாக அறிந்து கொண்ட நான் எனது தாயார் வீடான வெள்ளநூருக்கு சென்று அங்கு எனது மகளுடன் தங்கி கொண்டேன குறிப்பிட்டுள்ள நிலையில் நான் எப்போது தாயார் வீட்டிற்கு சென்றேன் என்றால் 2001 ம் ஆண்டு எனது அம்மா வீட்டிற்கு சென்றேன். எனது கணவர் நித்தியா என்கிற பெண்ணுடன் கள்ள உறவு வைத்துக்கொண்டதாக நான் சொல்லியுள்ள நிலையில் அது குறித்து காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் எழுத்துப்பூர்வமாக புகார் கொடுக்கவில்லை லால்குடி காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளரிடம் வாய்மொழியாக புகார் கொடுத்தேன். விசாரணைக்கு எதிர் மனுதாரர் வரவில்லை. எங்களது திருமணம் பெரியோர்களால் நடத்தி வைக்கப்பட்ட திருமணமாகும். நானும் எதிர் மனுதாரும் உறவினர்கள் ஆவோம். உத்தமி என்பவரை எனக்கு தெரியுமா என்றால் தெரியும். லூயீஸ், ஜோசப் என்பவர்களை எனக்கு தெரியுமா என்றால் தெரியும். எனது மகள் என்ன படித்துள்ளார் என்றால் MCA படித்துள்ளார். எனது மகளின் படிப்பு செலவுகள் அனைத்தையும் எதிர் மனுதாரர் தான் செய்தார் என்றால் சரியல்ல. நான் சம்பாதித்த பணத்தை வைத்து தான் எனது மகளை படிக்க வைத்தேன் என்றால் சரிதான். நான் எனது கணவர் மீது துறைரீதியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். நான்

புகார் கொடுத்தது தொடர்பாக எனது நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. நான் நீதிமன்றத்தில் எனது சொத்து மற்றும் கடன் குறித்த பிரமான வாக்குமூலத்தை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் தற்போது குடியிருக்கு வீடு சொந்த வீடு என்றால் எனது பெற்றோர்கள் வீடு. நான் தற்போது குடியிருக்கும் வீட்டின் சர்வே எண் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது அது அரசாங்கத்தால் வழங்கப்பட்ட தொகுப்பு வீடு ஆகும். நான் எனது கணவர் மீது நடவடிக்கை எடுக்ககோரி உயர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். எனது சம்மந்தியின் பெயர் என்னவென்றால் பிச்சை லூர்து சாமி லில்லி ஆவார். எனது குழந்தை பள்ளியில் சேர்க்கும் போது எதிர் மனுதாரர் என்னுடன் இருந்தார் என்றால் சரிதான். எனது பெண் திருமணத்திற்கு எவ்வளவு செலவு ஆனது என்றால் சுமார் 1.5 லட்சம் செலவு ஆனது. நான் 100 நாள் வேலைக்கு செல்வது குறித்து எனது பிரமாண வாக்மூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. எனது அப்பா எங்கே வேலை செய்தார் என்றால் கோத்தாரியில் Supervisor ஆக வேலை செய்தார் 1998 ம் ஆண்டு பணி ஓய்வு பெற்று விட்டார். என்னுடைய பெயரில் தற்போது மணக்காலில் சொத்துக்கள் உள்ளதா என்றால் இல்லை. இதற்கு முன்னர் மணக்காலில் எனக்கு சொத்துக்கள் இருந்ததா என்றால் இல்லை. என்னிடம் காட்டப்படும் புகைப்படமானது எப்போது எடுக்கப்பட்டது என்றால் எனது மகளின் நிச்சயதார்த்தின் போது எடுக்கப்பட்டது. அந்த புகைப்படமானது **எ.மா.சா.1** ஆகும். இந்த புகைப்படத்தில் உத்தமி சாரல் கேத்தரின் உள்ளாரா என்றால் உள்ளார் நான் பிரமாண வாக்மூலத்தில் நித்தியா என குறிப்பிட்டுள்ள நபர் தான் உத்தமி சாரல் கேத்தரின் ஆவார்.

இந்த புகைப்படத்தில் இருக்கும் இரண்டு பையன்கள் உத்தமி சாரல் கேத்தரின் என்றால் எனக்கு தெரியாது. எனது அப்பாவிற்கு சொத்துக்கள் உள்ளதா என்றால் தற்போது நாங்கள் இருக்கும் வீடு மட்டும் தான் உள்ளது. இதற்கு முன்னால் எனது அப்பா பெயரில் இருந்த நிலங்களை ஒத்திக்கு கொடுத்துவிட்டேன். புள்ளம்பாடியில் எனது பெயரில் சொத்துக்கள் உள்ளதா என்றால் இல்லை.

எதிர் மனுதாரரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக 31.10.2025 அன்று ஒத்திவைக்கப்படுகிறது.

ஒப்பம்/–சு.அருணாச்சலம்,
நீதித்துறை நடுவர்,
இலால்குடி

/உண்மை நகல்/ ARUNACHALAM Digitally signed by ARUNACHALAM Date: 2025.10.10 15:38:38 +0530

நீதித்துறை நடுவர்,
இலால்குடி